2014 டிசம்பர் 4]

ஆர்ப்பரித்தால் சுனாமி பொங்கும்! அம்மாவின் பேச்சில் அனல் தெறிக்கும்! அம்மாவின் வீச்சில் புரட்சி பிறக்கும்! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா முன் அமர தயங்கியவர்கள், அரிமா முன் அஞ்சி நடுங்கியவர்கள் தள்ளி வந்தாலும், தள்ளாடி வந்தாலும், தடுமாறி வந்தாலும், இடம் மாறி வந்தாலும், ஆயிரம் கனவு அடுக்கடுக்காகக் கண்டாலும் தமிழர் ஆயுள் முழுக்க அம்மாதான் நிரந்தர முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து, அவர் வீற்றிருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட 16-வது வார்டு, தேவகோட்டை நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் அமைத்துத் தருவதற்கு ஒப்புதல் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

பேருந்து வசதி

***18360— திருமதி ர. சுபா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஊராட்சி ஒன்றியம், கவர்பனை பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருச்சி மண்டலம்மூலம் இரண்டு நகரப் பேருந்துகள் தடம் எண் 19ஏ, 19பி, பெரம்பலூர், வீரகனூர் வழி—வேப்பந்தட்டை, கிருஷ்ணாபுரம்-வெங்கனூர் வழித்தடத்தில் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 40.86 சதவீதம் மட்டுமே உள்ளது. கவர்பனை கிராமம், பெரம்பலூர், வீரகனூர் வழித்தடத்தில் உள்ள வெங்கனூரில் இருந்து உட்புறமாக 500 மீட்டர் தொலைவே உள்ளதால், இப்பகுதி மக்கள் வெங்கனூர் பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கவர்பனை ஊராட்சியில் சுமார் 3,000 மக்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் தங்கள் தேவையை எளிதில் பூர்த்தி செய்துகொள்ள கவர்பனை ஊராட்சியில் புதிய பேருந்து வசதி செய்து கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டுமென்னும் இலட்சிய நோக்கத்தோடு தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களும், அனைத்துப் பகுதி மக்களும் சிறப்பான பேருந்து வசதிகளைப் பெறவேண்டும் என்பதற்காக 1,436 புதிய வழித்தடங்களையும், 100 சிற்றுந்துகளுக்குண்டான புதிய வழித்தடங்களையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்துத் தமிழக மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கி, அவை இன்று மகத்தான மக்கள் சேவை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)*

2014 டிசம்பர் 4]

எந்தெந்தக் கிராமங்களுக்கு, எந்தெந்த நகரப் பகுதிகளுக்கு பேருந்து வசதிகள் தேவை என்பதைக் கணக்கெடுத்து முழுமையாக இயக்கவேண்டுமென்பதற்காக இந்தப் புதிய வழித்தடங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தக் கிராமத்திற்கு அருகில் தொடர்ந்து 14 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்து இயக்கத்திலிருந்து 500 மீட்டர் தொலைவிலே அந்தக் கிராமம் உள்ளது. அந்தக் கிராம மக்கள் அந்தப் பேருந்து வசதியை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். அங்கு ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்ற பேருந்துகளில் சுமார் 40.86 சதவீதம் பயணிகள் அடர்வே உள்ளதால், மேற்படி கிராம மக்கள் அந்தப் பேருந்து வசதியைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்பனை ஊராட்சி, சேலம் மாவட்டத்தின் கடைசி எல்லையில் உள்ளது. இங்குள்ள மக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பிதான் உள்ளார்கள். இவர்கள் தாங்கள் விவசாயம் செய்த பொருட்களை விற்பனை செய்வதற்கும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளவும் இயலாத நிலை உள்ளது. வீரகனூர் 15 கி.மீ. தொலைவிலும், தலைவாசல் ஒன்றியம் 25 கி.மீ. தொலைவிலும், ஆத்தூர் 40 கி.மீ. தொலைவிலும் உள்ளது. பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் கூலி வேலைக்குச் செல்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு, இங்கு புதிய பேருந்து இயக்கவேண்டும். மேலும், இந்த வழித் தடத்தில் அரசுப் பேருந்து எண் 27 ஒன்று மட்டும்தான் காலை 6.55 மணிக்கு வந்து செல்கிறது. அதுவும் உடனடியாக 5 நிமிடத்திலேயே, 7 மணிக்கே, அந்தப் பேருந்தை எடுத்து விடுகிறார்கள். அந்தப் பேருந்து இரவு 10 மணிக்கும், விடியற்காலை 4.30 மணிக்கு மட்டும்தான் வந்து செல்கிறது. கவர்பனை ஊராட்சிக்கு அரசுப் பேருந்து எண் 27 நாள் ஒன்றுக்கு இரண்டுமுறை மட்டும்தான் இயக்கப்படுகிறது. அதேபோல, பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து*

எந்தப் பேருந்தும் இயக்கப்படவில்லை, தனியார் பேருந்தும் இயக்கப்படவில்லை. இங்குள்ள மக்கள் அந்தப் பேருந்தை இரண்டு முறை மட்டும்தான் பயன்படுத்தி வருகின்றார்கள். இது மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, இரண்டு பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மேலும். ஆத்தூர் முதல் சார்வாய்புதூர், வடகுமறை புனல்வாசல், வீரகனூர் வழியாக பெரம்பலூர் செல்வதற்கு புதிய பேருந்து வழித்தடம் அமைக்க 2011-2012, 2012-2013 ஆகிய இரண்டு நிதியாண்டுகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், துறைச் செயலாளரிடத்திலும் கடிதங்கள் கொடுத்தும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுபா, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திருமதி ர. சுபா: அவ்வளவுதான், கேள்வி முடிந்துவிட்டது. எனவே, இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர்-வீரகனூர் வழித்தடத்தில் 14 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய ஆத்தூர்-கவர்பனை வழித்தடத்தில் தினசரி 4 நடைகள் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அவை மக்களுடைய பயன்பாட்டில் இருந்து வருகின்றன. அந்த 4 நடைகள் இயக்கப்படுகின்ற பேருந்துகளில் பயணிகளுடைய அடர்வு 36.35% மட்டுமே உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் 2011 ஆம் ஆண்டு கோரிக்கை வைக்கப்பட்டது என்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி, துறையினுடைய அதிகாரிகள் ஆய்வு செய்து, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கின்ற வழித்தடத்தில் பேருந்து சேவைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகளினுடைய

2014 டிசம்பர் 4]

அடர்வு மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அந்த வழித்தடத்தில் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபொழுது பேருந்துகள் இயக்கலாம் என்று துறையினுடைய அதிகாரிகள் கருத்து தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற வினாவில் கவர்பனை கிராமத்திற்குப் பேருந்தை இயக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, துறையினுடைய அதிகாரிகள் ஆய்வு செய்து, பயணிகளினுடைய எண்ணிக்கைக்கேற்ப, துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு பெருநகர போக்குவரத்து வசதி என்கிற அடிப்படையிலே பல புதிய திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது. அதிலே 20-க்கும் மேற்பட்ட பணிமனைகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலையிலே அறிவிக்கப்பட்ட பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைப்பதற்கான வேலை தொடங்கப்பட்டதற்கான அறிகுறியே இல்லாமல் இருக்கிறது. அந்தப் பகுதியிலே பேருந்துகளை இயக்குவதற்கு இப்போது* dead-mileage *என்பது அதிகமாக இருக்கிற காரணத்தினால், தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலையிலே ஒரு பணிமனையை விரைவாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2011 ஆம் ஆண்டு வரை பேருந்துகளுடைய எண்ணிக்கைக்கேற்ப பணிமனைகள் அதிகரிக்கப்படவில்லை. 10 பணிமனைகள் மட்டுமே புதிதாக உருவாக்கப்பட்டன. பேருந்துகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபட்சத்தில் பணிமனைகளினுடைய எண்ணிக்கை*

அதிகரிக்க வேண்டுமென்று மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மூன்றரை ஆண்டுகளில் 75 புதிய பணிமனைகளை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து பணிமனைகளுக்கும் இடங்களைத் தேர்வு செய்து, திட்ட மதிப்பீடு தயார் செய்து, அதற்குண்டான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, விரைவாகப் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று ஆணையிட்டிருந்தார்கள். அதன்படி, பல்வேறு பணிமனைகள் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற அந்தப் புதிய பணிமனைகளுக்கு துறை சார்பாக இடம் தேர்வு செய்யப்பட்டு வந்து சேரவில்லை. விரைவாக அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, அந்தப் பணிமனைகள் அமைப்பதற்கு துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்திலிருந்து திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி வரை நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை கேட்டிருக்கிறேன். அந்தப் பகுதிகளிலே காய்கறிகள், பழங்கள், பூக்களைக் கொண்டு செல்வதற்கும் மற்றும் மக்கள் போய் வருவதற்கும் வசதியாக இருக்க வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறேன். எனவே, அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடத்தில் துறையின் சார்பாக ஆய்வு

செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

அரசு விதைப் பண்ணை

***4615— திரு. டி. சுரேஷ்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியிலுள்ள அரசு விதைப் பண்ணையினை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் மொழியின் முதல் வார்த்தை, மூவுலகம் ஒலிக்கும் புகழ் வார்த்தை அம்மா! நாங்கள் நித்தமும் வணங்குகின்ற எங்களின் குலதெய்வம் அம்மா! மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள வனத் துறைக்குச் சொந்தமான மத்திய, மாநில அரசு விதைப் பண்ணையில் விவசாயத்திற்கு உகந்த பகுதியை உரிய முறையில் தேர்வு செய்து மீண்டும் பயன்படுத்த ஈகைக்கும், வாகைக்கும் இலக்கணக் காவியம், ஈடு இணையில்லா கலங்கரை விளக்கம், படை தகர்த்து பகை வெல்லும் தன்மானச் சிங்கம், மாண்புமிகு மக்களின் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டியதன் அடிப்படையில் ஒரு குழு அமைத்து, கள ஆய்வு மேற்கொண்டு,